**கழுக்கம்**

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்சங்கங்களின் தேர்தல் ஆணையம்

அனுப்புநர்
திரு. ம. ரா. மோகன், இ.ஆ.ப.,(ஓய்வு)
ஆணையர்
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273,அண்ணா சாலை, தேனாம்பேட்டை,
சென்னை 600 018.

பெறுநர்

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் அனைத்து செயற்பதிவாளர்கள்

நக. 649/2015 கூதே1 நாள்: 29.04.2015

அய்யா / அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுத்தேர்தல்– கணினி மூலம் வடிவமைக்கப்பட்ட புள்ளி விவரங்கள் – மாநில தேர்தல் அலுவலர் சரிபார்த்தல் – User ID மற்றும் Pass Word அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

பார்வை: இவ்வாணையத்தின் கடிதம் நக. 254/2015 கூதே 1 நாள் 4.03.2015

===

பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதன்படி, கணினிமூலம் தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் இவ்வாணையத்தில் 13.3.2015 அன்று சில குறிப்பிட்ட மாநில தேர்தல் அலுவலர்களின் அலுவலக இரண்டாம் நிலை அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு

காணொளி காட்சி மூலம் மென்பொருள் மூலம் தொகுக்கப்பட்ட புள்ளி விபரங்களை எந்தெந்த முறைகளில் கையாண்டு, எவ்வகையான படிவ அறிக்கைகள் தொகுத்து print out எடுக்க இயலும் என்பது குறித்து விளக்கப்பட்டது.

மேலும் இச்செயல்முறை விளக்கத்தின் போது, மாவட்ட தேர்தல் அலுவலர்களால் அளிக்கப்பட்ட 60 கலங்கள் புள்ளி விபரங்களில் அனைத்து கலங்களும் சரியாக பூர்த்தி செய்யாமை மற்றும் தவறான விபரங்கள் அளிக்கப்பட்டதால் உரிய தொகுப்பு படிவம் விபரங்கள் ஏதுமின்றி வெற்று படிவமாக பெறப்பட்டது குறித்தும் விளக்கப்பட்டது.

தற்போது தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள website முகவரியில் தாங்கள் login செய்து தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் தொடர்பான 60 கலங்களின் விபரம் சரிபார்த்திடவும், தேவையான அறிக்கைகளை பெறவும் முதற்கட்டமாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

...2

(1) இது தொடர்பாக தாங்கள் இணைய தள தொடர்புடைய கணணியில், 'address bar' இல் தட்டச்சு செய்ய வேண்டிய இணைய முகவரி

(2) தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள user id, pass word / விபரம் இதனுடன் கூடிய சீலுறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதனை தங்களின் அலுவலக தொடர்புடைய அலுவலர்களுக்கு மட்டும் தொடர்புறுத்தி கமுக்கமாக வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தவும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள வலைதள முகவரியில் (web site address) தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள User ID (மற்றும்) password ஐ பயன்படுத்தி Login செய்து, தேர்தல் நடைபெற்ற ஒவ்வொரு சங்கத்தின் 60 கலம் புள்ளி விவரங்களை, தங்கள் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் ஒப்பிட்டு சரிபார்த்து தவறுகள் / விடுதல்கள் இருப்பின் அது குறித்து சங்கங்கள் வாரியாக குறிப்பெடுத்துக் கொள்ளவும் தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன். சங்கங்களின் புள்ளி விவரங்களில் தவறுகள் இருப்பின் உரிய திருத்தங்கள் இணையதளத்தில் மேற்கொண்டிட ஏதுவாக ஓர் ஒருங்கிணைப்பாளரை நியமித்து கண்டுபிடிக்கப்பட்ட தவறுகள் / விடுதல்கள் விவரங்களுடன் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் Casual Vacancies தொடர்பான தேர்தல் புள்ளி விபரங்களை இணையதளத்தில் உள்ள படிவத்தில், பூர்த்தி செய்து அளிக்கவும், மற்றும் 4.10.2013க்கு பின்னர் நடைபெற்ற விடுபட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல், புதியதாக பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல், புத்துயிரூட்டப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் இராஜினாமா/கலைத்தல் போன்ற காரணங்களுக்காக மீண்டும் முழுமையான நிர்வாகக்குழு அமைக்க நடைபெற்றத் தேர்தல் ஆகியவற்றிற்கான 60 கலன் புள்ளி விபரங்களையும் நேரடியாக இணையதளத்தில் பதிவு செய்யுமாறும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களை அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் தான் அறிக்கைகள் பெறப்படும் என்பதால், தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதுவரை நடைபெற்றத் தேர்தல் தொடர்பான அனைத்து விபரங்களும் சரியாகவும் முழுமையாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும், இதற்கானப் பணியினை 31.05.2015க்குள் முடிக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இனிவரும் காலங்களில் நடத்தப்படும் அனைத்து தேர்தல்களிலும் தொடர்புடைய கூட்டுறவுச் சங்கங்களின் 60 கலன் புள்ளி விபரங்களை, அவ்வப்போது நேரடியாக இணையதளத்தில் பதிவு செய்யவும் மாவட்டத் தேர்தல் அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

(ஒம்./–)
ஆணையர்.